

கண்ணின் மணியாய் காலம் எல்லாம் எம்மை
கண்கலங்காமல் இமை போல் காத்த - எம்
குடும்பத் தலைவனுக்கு இந்நூல் சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரும்பிராயில் பிறந்தவரும்

பரந்தனில் வாழ்ந்தவரும்

கொழும்பில் வசித்து வந்தவரும்

எம்மை எல்லாம் அதிர்ச்சிக்குள்ளாக்கி

26.05.2011 எமை விட்டுப் பிரிந்து

இறைபதம் அடைந்த செல்லத்துரை கனகேந்திரம்

அவர்களின் ஆத்மா சாந்தியடைய

எல்லாம் வல்ல அப்

பரம்பொருளை மன்றாடுவோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்
# திரு. செ.கனகேந்திரம்



**தோற்றம்**
**22/01/1943**

**மறைவு**
**26/05/2011**

## திதிவெண்பா

ஆண்டுகர வருடம் ஆனமாதம் வைகாசி
பூண்டபர நவமி சேர - மாண்புடைய
செல்லத்துரை கனகேந்திரம் பூவுலகைவிட்டு
மெல்லெனவே மறைந்தார் வியந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

இந்து மாகடல் நடுவே எழில் முத்தாய் திகழ்கின்ற இலங்கையின், வடபால் அமைந்துள்ள உரும்பிராய் நகரில் சிவகுல வீதியில் விவசாயியாக வாழ்ந்த கணபதிப்பிள்ளை செல்லத்துரைக்கும், அவர் தம் மனைவி சுதுமலையைச் சேர்ந்த செல்லம்மாவிற்க்கும் இல்லற வாழ்வின் நற்பேறாக இரண்டாவது பிள்ளையாக 1943 ஆம் ஆண்டு தை மாதம் 22 ஆம் திகதி கனகேந்திரம் பிறந்தார்.

இவர் அமரர் பூபதி, சிவலிங்கம், சரஸ்வதி ஆகியோரை சகோதரர்களாக கொண்டவர். இவர் தனது பத்து வயதிலேயே தாயை இழந்தும், தந்தையின் அன்பாலும் அரவணைப்பாலும் ஊக்கத்தாலும் ஊரில் உள்ளவர்கள் புகழ கல்வி கற்றார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையிலும், இடைநிலைக் கல்வியை உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும் கற்றார். பின்னர் யாழ்/ தொழில்நுட்ப கல்லூரியில் இரண்டு வருட முழுநேரக் கற்கை நெறியான உயர் வணிகத் தகுதி பத்திர தொழிற் கல்வியை 1963 முதல் 1965 வரை கற்றார்.

அதனைத் தொடர்ந்து 01.10.1965ல் தராதரப் பத்திரமற்ற வணிக ஆசிரியராக மட்டக்களப்பு வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் அரச சேவையில் இணைந்து தன் முதல் ஆசிரியப் பணியை ஆரம்பித்ததன் மூலம் தங்களுக்காக வாழ்ந்த தந்தையை மனங்குளிர வைத்தார். பின்பு பலாலி ஆசிரிய கலாசாலையில் வணிகக் கல்வி விசேட பயிற்சியை 09.01.1966 முதல் 31.12.1967 காலப்பகுதியில் முடித்து பின் காலி மாவட்டத்தில் வணிக பாட ஆசிரியராக இரு வருடங்களாக பணியாற்றினார். தொடர்ந்து கொட்டாஞ்சேனை மத்திய மகா வித்தியாலயத்தில் நான்கு வருடங்கள் பணிபுரிந்த பின் இடமாற்றம் பெற்று வந்து யாழ்/வேலணை மத்திய மகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாலயத்திலும் பின் யாழ்/முத்துத்தம்பி மகா வித்தியாலயத்திலுமாக நான்கு ஆண்டுகள் வணிக பாட ஆசிரியராக கடமையாற்றினார். அதே காலத்தில் மீண்டும் யாழ்/ தொழில்நுட்பக் கல்லூரியில் வணிக டிப்ளோமா கல்வியை நான்கு ஆண்டுகள் கற்று பட்டதாரியானார். இதேவேளை 1976 ஆம் ஆண்டு ஆனி மாதம் 2ஆம் திகதி வந்தாரை வாழவைக்கும் வன்னியில் கிளிநொச்சி - பரந்தனில் சீரும் சிறப்புமாக வாழ்ந்த வேலுப்பிள்ளை வல்லிபுரத்திற்கும் அவரது மனையாள் சின்னத்தங்கத்திற்கும் இளைய மகளாகப் பிறந்த பரமேஸ்வரி என்பவரை கரம் பிடித்து தனது இல்லற வாழ்வை ஆரம்பித்தார். இதைத் தொடர்ந்து 1978 ஆம் ஆண்டு தொடக்கம் பரந்தனைத் தனது இருப்பிடமாக்கிக் கொண்ட இவர்களது இல்லறத்தின் நற்பேறாக பிரசாந்தி, யாழினி என இரு புதல்விகள் கிடைத்தனர்.

1978ம் ஆண்டு முதல் கிளி/முருகானந்தா மகா வித்தியாலயத்தில் ஒரு வருடம் பணி புரிந்த பின் 1979ஆம் ஆண்டு தொடக்கம் 1994 ஆம் ஆண்டு வரை பதினைந்து ஆண்டுகள் தொடர்ச்சியாக கிளி/மத்திய கல்லூரியில் ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் பணியாற்றினார். இக் காலத்தில் இவர் பாடசாலையில் மட்டுமல்லாது மற்றும் பல பணிகளில் ஈடுபட்டார். எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் கூட்டுறவு பயிற்சிக் கல்லூரியில் தட்டச்சு, சுருக்கெழுத்து கற்பித்தல், மாலை வேளைகளில் தேவையான மாணவர்களுக்கு தேவையான பாடம் சொல்லிக் கொடுத்தல் என்பன அவற்றிற் சிலவாகும். பலமுறை நாட்டின் நிலமை காரணமாக இடம்பெயர்ந்து மனைவி பிள்ளைகளைப் பிரிந்திருந்தாலும் போக்குவத்து வசதியற்ற காலத்திலும் துவிச்சக்கரவண்டியில் பயணம் செய்து இவர் தனது சேவையை திறம்படச் செய்தார்.

பல தடவை அதிபராகப் பதவியேற்கும் வாய்ப்புக்கள் வந்தபோதும் அவற்றை நிராகரித்து வந்த இவர், பலரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுகோளுக்கிணங்கி கிளி/கனகாம்பிகைக்குளம் மகாவித்தியாலய அதிபராக 1994 முதல் 1997 வரை கடமையாற்றினார். இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி உதவிக் கல்விப் பணிப்பாளராக இரு வருடங்களும், பின் வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக நான்கு வருடங்களும் பணியாற்றிய பின் தன் அறுபதாவது வயதில் 22.01.2003 அன்று ஓய்வு பெற்றார்.

இவர் கிளிநொச்சியில் வாழ்ந்த காலத்தில் ஆசிரியப் பணியை விட விவசாயமும், வீட்டில் தோட்டமும் செய்வார். இவ்வாறாக எந்நேரமும் பாடுபட்டு உழைத்து தன் மனைவி பிள்ளைகளை அன்போடும், பாசத்தோடும் பேணியது மட்டுமன்றி, பிள்ளைகளை நன்றாக கல்வி கற்க வைத்ததால் இன்று அவர்கள் உயர்ந்த நிலைகளில் உள்ளனர்.

உள்நாட்டுப் பிரச்சனைகளால் சொந்த வீட்டில் வசிக்க முடியாததால் ஓய்வுபெற்ற பின் யாழ்ப்பாணம், நுவரெலியா ஆகிய இடங்களில் இளைய மகளுக்கு துணையாக வசித்து, பின் கொழும்பில் சொய்சாபுர தொடர்மாடியில் வாழ்ந்து வந்தார்.

பிரசாந்திக்கு சதீஷ்குமாரையும், யாழினிக்கு கோடீஸ்வரனையும் மணமுடித்து சிறப்பாக வாழ வைத்ததன் மூலம் டவீனா, டனிசன், தனிஸ்க் ஆகியோரைப் பேரப்பிள்ளைகளாக கண்டு மகிழ்ச்சியடைந்தார். பிள்ளைகளைப் போலவே பேரப்பிள்ளைகளின் வாழ்விற்கும் பல காலம் துணையிருந்து நல்வழி காட்டுவார் என்று குடும்பத்தினர் எதிர்பார்த்திருந்த வேளையில், குடும்பம், உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர் யாவரையும் அதிர்ச்சிக்கும் சோகத்திற்கும் உள்ளாக்கிவிட்டு அமைதியான முறையில் 26.05.2011 அன்று அன்னார் இறைவனடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு மனையாளின் உள்ளக் குமுறல்

பிறந்தவர் எல்லோரும் ஒரு நாள் போகத்தான் வேண்டும் என்பது உலக நியதி என்று மனதைத் தேற்ற முடியாத நிலையில் எப்படியப்பா போய்ச் சேர்ந்தீர்கள்..... எவ்வளவு சந்தோஷமாக மீண்டும் திரும்பி வந்து பேரப்பிள்ளைகளுடன் இருப்பேன் என்று சொல்லிவிட்டு வந்தீர்கள்.

நாட்டின் சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட போதும் பிள்ளைகளைப் படிக்க வைத்து, நிம்மதியான வாழ்வு தேடிக் கொடுத்து சொந்த மகன்கள் போல் மருமக்கள் கிடைத்தும், ஆசையாய்க் கொஞ்சப் பேரப்பிள்ளைகள் கிடைத்தும், உங்கள் வாழ்க்கை ஏன் அதை அனுபவிக்க முடியாமல் முடிந்து போனது?
அப்பாவை நன்றாகப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்ட பிள்ளைகள் தங்கள் கடமை செய்ய முடியவில்லையே என்று கலங்கி நிற்கின்றார்கள். பேரப்பிள்ளைகள் பாட்டுப் பாடவும், விளையாடவும் அப்பாவைத் தேடுகின்றார்கள்.

எனக்கு கணவனாக மட்டுமில்லாது ஒரு தாயைப் போல் கவனிப்பீர்களே. எனது கடைசிக் காலம் வரை நீங்கள் இருப்பீர்கள் என்று எவ்வளவு நம்பிக்கையுடன் இருந்தேன். அது இப்படிச் சிதைந்து போய்விட்டதே! திரும்பி வருவீர்கள் என்று நம்பித் தானே அனுப்பி வைத்தேன்... உங்கள் பொறுமைக்கும், எதற்கும் மனதைக் குழப்பாமல் "நடப்பது தான் நடக்கும்" என்று சொல்வதற்கும், எப்படி திடுதிப்பென்று போக வேண்டி வந்தது? எல்லோரும் எவ்வளவோ ஆறுதல் படுத்தியும், மனங் கலங்கி தவித்தபடி இருந்தாலும்.... எல்லாம் வல்ல பரம்பொருளின் காலடியில் உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

*பாசமுள்ள மனைவி*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பா என்றால் அன்பு........

எங்கள் மீது அன்பும் பாசமும் பொழிந்து, நீங்கள் இருவரும் எனது கண்கள் போல எனக்கூறி கண் இமை போல் இருந்து எங்களை வளர்த்தார் எங்கள் அப்பா.

எல்லோரும் சொல்வார்கள் "நீ குழந்தையாக இருந்த போது அதிகமாக அழுதால் இரவு இரவாக தூக்கித் திரிந்து பாட்டுப் பாடி தூங்கவைப்பது உன் அப்பா தான் என்று" நான் மட்டுமல்ல எல்லாக் குழந்தைகளுமே அப்பாவின் கள்ளங்கபடமற்ற பேச்சு, பாட்டு, புன்சிரிப்பான முகத்தைப் பார்த்து சட்டென ஒட்டிக் கொள்வார்கள்.

அப்பா என்றால் அன்பு, அப்பா என்றுமே என்னிடம் கடும் சொல் பேசியதில்லை, அடித்ததில்லை. ஆனால் சரி பிழைகளை, ஒரு செயலின் பின் விளைவுகளை, உதாரணங்களுடன் பொறுமையாக எடுத்துச் சொல்வார். வாழ்க்கையின் சரி பிழைகளை எடுத்துச் சொன்னது மட்டுமல்லாது, என்னுடைய முன்னேற்றத்திலும் ஏணியாக இருந்தார். எனக்குச் சிறு வயதில் இசைக் கருவிகளைப் பழகுவதில் ஈடுபாடு இருந்தது. ஓகன் பழகப் போகிறேன் என்றேன், விஞ்ஞானக் கல்லூரியில் வகுப்பு முடிந்ததும் இருட்டிவிடுவதால் பொறுமையாக வந்து கூட்டிச் செல்வார். வயலின் பழகப் போகிறேன் வாங்கித் தாருங்கள் என்று கேட்டேன், உடனே வாங்கித் தந்தார்.

எங்கள் இளவயதுக் காலம் மறக்க முடியாத பசுமையான காலம். ஒவ்வொரு இரவும் நானும், தங்கையும் கதை கேட்க அப்பாவின் இருபுறமும் காத்திருக்க பஞ்ச தந்திரக் கதைகள், புராணக்கதைகள், ஔவையார் பாடல்கள், பட்டினத்தார் பாடல்கள், அக்கதைகளும் பாடல்களும் வாழ்க்கைக்குச் சொல்லும் தத்துவங்கள் எல்லாம் சொல்லுவார்.

இந்து சமயத்தில் அதிக பற்றுக் கொண்டவர் அப்பா. எங்களுக்கும் சைவ நெறிகளை கதையாகக் கூறி நடைமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையிலும் பின்பற்ற கற்றுத் தந்தார். சிறு வயதிலிருந்து காலையும், மாலையும் தோத்திரம் கூறி மனதை ஒருநிலைப்படுத்த கற்றுத் தந்தார். பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும், இன்று வேலைத் தளங்களிலும் எடுத்த காரியத்தை வெற்றிகரமாக முடிக்க நீங்கள் தந்த பயிற்சியே மூலகாரணம்.

பல்கலைக்கழகம் போக மறுத்த என்னை புத்திமதிகள் கூறி பல்கலைக்கழகம் சென்று படித்துப் பட்டம் பெறவைத்தார்.

பேரப்பிள்ளைகளைப் பார்க்க வந்தால் வீடே களைகட்டும், அப்பா அவர்களைக் கொஞ்சிக் குதூகலிப்பதும், டவீனா அப்பா... அப்பா என சுற்றிச் சுற்றி வருவதும், டனிசனும், தனிஸ்க்கும் அப்பாவின் பாட்டுக் கேட்டு அழுகை நிறுத்திக் கேட்பதும் இன்னும் என் கண்முன்னே நிற்கின்றது.

அப்பா யாரிடமும் வன்சொல் பேசியதில்லை. யாருடைய மனம் நோகவும் பேசியதில்லை. சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை பின்பற்றியே வாழ்ந்தவர். அப்பாவின் மறைவு செய்தி தந்த அதிர்ச்சியை இன்னும் என்னால் ஜீரணிக்க முடியவில்லை. அவருடைய மரணம் ஏற்பட்ட முறையைப் பற்றி சிந்திக்கும் போது புண்ணியவான்கள் வாழ்க்கையில் ஒரு பூரணத்துவமும் உண்டு என்ற பெரியோரின் கருத்தே மேலோங்கி நிற்கின்றது.

நீங்கள் எங்களை விட்டுப் பிரியவில்லை
என்றும் எங்களுடன் எம் மனதில் வாழ்ந்து
கொண்டுதானிருக்கிறீர்கள்.

*அன்பு மகள் பிரசாந்தி*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்ப் பூக்கள்

அன்பு அப்பாவுக்கு
ஆசை மகள் நான்
கண்ணீர்ப் பூக்களைக்
காணிக்கையாக்குகிறேன்

எங்கே சென்றீர்கள்?
எப்படிச் சென்றீர்கள்?
எமையெல்லாம் விட்டுச் செல்ல
எப்படித் துணிந்தீர்கள்?

நினைவு தெரிந்த நாள் முதலாய்
நீங்காத பல நினைவு
எதை எழுதி எதைத் தவிர்க்க
எண்ணித் தவிக்கின்றேன்

அன்பும் பாசமுமாய்
அரவணைத்த என் அப்பா
நித்திரைக்குப் போகும் போது - பல
கதை சொல்லித் தூங்க வைப்பார்.

புராணக் கதைகளையும் நீதிக் கதைகளையும்
பாட்டுப் போலவே நற்கவிதைகளும் பழமொழியும்
சிறுவயதில் சொன்னது தான் - பின்
சிறப்பான ஓர் மாணவியாய்
பள்ளிப் பருவத்தில்
பற்பல போட்டிகளில்
பங்கு பற்றிப் பல
பரிசு பெற உதவியது.

சித்தப்பா வந்த போது
சஞ்சீவி மரத்தடியில்
பௌர்ணமி நிலவில் மணற்கும்பி மேலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய் போட்டுப் படுத்திருந்த
மனத்தை விட்டகலா
மணித்துளிகள் எத்தனையோ!

என்னை முன்னாலும்
என் அக்காவைப் பின்னாலும்
மோட்டார் சைக்கிளிலே
பள்ளிக்கு ஏற்றிச் சென்று - பின்
பிரச்சினைக் காலத்திலே
துவிச்சக்கர வண்டியிலே
ஏற்றிச் சென்ற நாட்களை நான்
எப்படியப்பா மறப்பேன்.

பாலர் வகுப்பு முடிந்து
பன்னிரண்டு மணிக்கு வந்து
உங்கள் வகுப்புகள்
இரண்டரைக்கு முடியுமுன்பு
அதிபரின் அலுவலகத்திற்கு
அடுத்திருந்த வராந்தாவில்
வாங்கினில் நான் தூங்கினாலும்
வாஞ்சையாக எழுப்பி என்னை
கன்ரீனுக்கு கூட்டிச் சென்று
தேனீரும் மில்க் - ரொபியும்
வாங்கித் தந்த நினைவுகளில்
வாய் இன்னும் இனிக்குதப்பா.....

பல முறை நாம் இடம் பெயர்ந்தும்
பல இடர்கள் வந்த போதும்
ஆலமர விழுது போல
அவற்றையெல்லாம் நீங்கள் தாங்கி
எக்குறையும் தெரியாமல்
எமை நீங்கள் வளர்த்தீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்டாதிச் சனி என்றால்
காக்காக்கு சோறு வைத்து
காக்கா பறந்து வந்து
சாப்பிடக் காத்திருந்து - பின்
வாழை இலை போட்டு
வெறுந் தரையில் உட்கார்ந்து
அம்மா பரிமாற
நால்வரும் ஒன்றாக
அறுசுவை உணவுண்ட
அந்நாட்கள் இனி வருமா?

பிரச்சினை காலத்திலும்
இடம்பெயர்ந்து இருந்தாலும்
பொருட்கள் தடை என்ற
சமர்க்கால சூழலிலும்
எதுவும் இல்லை என்றாமல்
எல்லாம் வாங்கித் தந்தீர்கள்
படிக்கும் போது எனக்கு
பாட்டு கேட்கும் பழக்கமென்று
பலமடங்கு விலை கொடுத்து
பற்றறி வாங்கி வருவீர்கள்.

போக்குவரத்து இல்லாமல்
பலசரக்கு கப்பலிலே
பல்கலைக்கு சென்ற போது
பலகஷ்டம் வந்த போதும்
அனுப்பி மூன்று மாதத்தால்
அங்கு வந்து சேரும் உங்கள்
அன்பு மிக்க கடிதத்திற்கு
அனுதினமும் காத்திருந்து - உங்கள்
கடிதத்தை கண்டதுமே
கஸ்டமெல்லாம் கரைந்து விடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடி ஓடி எமக்கு உழைத்து
ஓய்வு பெற்ற பின் நீங்கள்
பரந்தனில் இருந்த போது - என்
பிறந்த நாள் பரிசென்று
பொன் அகம் வந்து அன்று
பெற்றோர்கள் நீங்கள் தந்த
மோட்டார் சைக்கிள் என்
முதல் மோட்டார் வாகனம் தான்

யாழ்ப்பாணம் வந்த பின் - நான்
இறுதியாண்டு படிக்கும் போது
வைத்திய சாலைக்கு நான்
வேளைக்கு சென்றாலும்
மத்தியான வெய்யிலிலும்
மதியச் சாப்பாட்டை
சைக்கிளிலே கொண்டு வந்து
சுடச்சுடத் தருவீர்கள்.

என்னுடைய நண்பர்கள்
என்னிடம் வரும் போது
சாப்பிடக் குடிக்க
அதைக் குடு இதைக் குடென்று
என் இனிய நண்பர்களை
எனைப் போல கவனித்து
அன்பான உங்கள்
அரவணைப்பால் அவர்களுமே
அங்கிள் அங்கிள் என்று
வாஞ்சையுடன் பழகுவார்கள்.

கொழும்பில் நான் வேலை செய்து
ஒரு வருடம் முடிந்த பின்பு
நுவரெலியா வேலையென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அங்கு சென்ற போது
கஷ்டங்களைப் பாராமல்
உடனிருந்த அந்த நாட்கள்
அத்தானும் அக்காவும்
டவிக்குட்டி எல்லோரும்
பாசமாய் இருந்தார்கள்
போனிலே கதைப்பார்கள்
அக்கா எங்களுடன்
இல்லாத குறை தவிர
நாங்கள் மூன்று பேரும்
நன்றாக இருந்தோமே.

உங்கள் கடமைகளில்
என்றும் குறை வைக்காமல்
என் வாழ்க்கைத் துணையாக
அன்பான என் துணையைத்
தேடித் தந்தீர்கள்
திருப்தியாய் இருந்தீர்கள்
மகன்கள் இல்லை என்றாலும்
மருமகன்மார் மகன் போல
நல்ல பிள்ளைகள் என்று
நீங்கள் மகிழ்ந்தீர்கள்.

நானும் வெளியூர் சென்ற பின்பு
நீங்கள் இருமுறை வந்து சென்று
இப்போ டனிசனும், தனிஸ்கும்
இருவரும் பிறந்த பின்பு
பற்பல காரணத்தால்
பலகாலம் பிரிந்திருந்த
எங்கள் குடும்பம் இனி
ஒன்றாய் இருப்போம் என்று
அப்பா, அம்மா உங்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தான், அக்கா, டவி, டனிசன்
எங்கள் குடும்பமும் இனி
ஒன்றென்று மகிழ்ந்திருந்தோம்.

உங்களை இனி நாங்கள்
வடிவாக பார்க்க வேண்டும்
பேரப்பிள்ளைகளுடன் - நீங்கள்
பொறுமையாக கதை சொல்லி
விளையாடி மகிழ்ந்திருக்கும்
அழகினை ரசிக்க வேண்டும்
லண்டன் சுற்றிப் பார்க்க வேண்டும்
பல நாடுகளைக் காட்ட வேண்டும்
இப்படி இப்படியே
இன்னும் எத்தனையோ
கற்பனைகள் வைத்திருந்தோம் - எல்லாம்
கனவாகிப் போனதப்பா........

கடைசி முறை நீங்கள்
இலங்கைக்கு வருமுன்பு
கடலையும் புட்டும் கொண்டு
தனிஸ்க்கையும் பார்க்கவென்று
வீட்டுக்கு வந்த போது
கோடீஸ் உங்களிடம்
"மாமா இன்று என் சமையல்
சாப்பிட்டுப் போங்கோ" என
அடுத்த முறை வந்து
வடிவாய் சாப்பிடுறன்
என்றல்லோ சொன்னீர்கள்
எப்ப இனி வருவீர்கள்....?

டனிசனை ஒரு புறமும்
தனிஸ்க்கை மறு புறமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிலில் கிடத்தி விட்டு
கதை சொல்லி பாட்டாக
பச்சை இலுப்பை வெட்டி
பால்வடிய தொட்டில் கட்டி
என்று பாடும் தாலாட்டை
இனி எப்போ கேட்கிறது?

பேரப்பிள்ளைகளின்
அழுகுரலைக் கேட்டாலே
செய்யும் வேலை விட்டுவிட்டு
சென்று நீங்கள் தூக்குவீர்கள்
எவ்வளவு சந்தோஷம்
இம்முறை உங்களிடம்
பிரிய மனம் இல்லாமல்
பிளைட் ஏற வரும் போது
ஓடிப் போய் எனது
வேலைகளை முடித்துவிட்டு
ஓடி நான் வருவேன் என்று
சொல்லி விட்டு வந்தீர்கள்.

போனில் நான் கதைக்கும் போது என்
பிள்ளையின் குரல் கேட்டு
பிள்ளையை நான் விட்டு விட்டு
வந்திட்டேனா என்றீர்கள்
இப்படி நிரந்தரமாய் விட்டுவிட்டு
எப்படித் தான் சென்றீர்கள்.

வந்து நான்கே நாட்கள் தான்
நமையெல்லாம் விட்டு நீங்கள்
பிரிந்ததாக வந்த செய்தியில்
பதறித் துடித்து விட்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளே அது சும்மா
நினைவிழந்து நிலையாக
இருக்க வேண்டும் - என் அப்பா
நினைவு திரும்ப வேண்டுமென
ஒரு சில நிமிடத்தில்
ஓராயிரம் வேண்டுதல்கள்
எதுவும் பலிக்கவில்லை
என்ன தான் நான் செய்வேன்.

அக்காவை நல்லதொரு
பட்டதாரி ஆக்கினீர்கள்
என்னைப் படிப்பித்து
வைத்தியரும் ஆக்கினீர்கள்
எங்கள் கடமையை தான்
நாம் செய்ய முடியவில்லை
இன்னமும் தான் நான் - நீங்கள்
இல்லையென்று நம்பவில்லை
ஏதோ வேறு ஓர் இடத்தில்
இருப்பதாய் தான் உணர்கின்றேன்.

என்றும் உங்கள் நினைவலைகளை சுமந்து
எங்களுடன் நீங்கள் இருப்பதாகவே நினைத்து
அப்பா உங்கள் ஆத்மாவின்
சாந்திக்காய்ப் பிரார்த்தித்து
உங்கள் காலடியில் உள்ளம் உருகி என்
கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகிறேன்.



அன்பு மகள்
யாழினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்களின் ஆதங்கம்

அமைதியும் சாந்தமுமாக எப்போதும் சிரித்த முகத்துடன் இருப்பீர்களே மாமா. நாங்கள் உங்களையும் எங்கள் அப்பா போலத் தானே நினைத்திருந்தோம். நீங்களும் எங்களிடம் மகன்களைப் போல பாசத்துடன் நடந்துகொண்டீர்கள். நீங்கள் இருவரும் வீட்டில் இருந்தால் எவ்வளவு நேரமானாலும் பிள்ளைகளைப் பற்றிக் கவலைப்படாமல் வருவோம். கடைசியாக விமானநிலையத்தில் உங்களை வழியனுப்ப வந்த போது மீண்டும் அழைத்துப் போக வருவோம் என்று தானே நினைத்து அனுப்பி வைத்தோம். அது கனவாகிப் போனதை நினைத்தாலே நெஞ்சம் கனக்கிறது. உங்களைத் தேடும் உங்கள் பேரப் பிள்ளைகளுக்கு எப்படித் தேறுதல் சொல்லுவது. நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் நெஞ்சமெல்லாம் உங்கள் நினைவுகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றோம்.

அன்பு மருமகன்மார்,
சதீஸ்குமார், கோடீஸ்வரன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## DEAR GRANPA.....

Appa... Where are you? When you came to Sri Lanka you asked me to come with you. I said "I will come to Sri Lanka with my daddy, mummy & Danisan". Now, we all are here in Sri Lanka. But I couldn't see you. I asked my daddy and he said "you went up the sky to meet the stars" I am being a good girl and singing songs (Aararo aararo & Kaakkaa Kaakka) to my baby brother & cousin brother when they are crying, as you said over the phone. When will you come back to take me to park and to tell stories in the night?

**Loving grand daughter**
**Dhavina**

அப்பா... காலையில் ஆறு மணிக்கு எழுந்ததும் மம்மி பாப்பா தந்துவிட்டு, உங்களுடன் தான் விட்டுவிட்டு கீழே போவா. நீங்கள் "பச்சை இலுப்பை வெட்டி பால் வடிய தொட்டில் கட்டி..." என்று பாடித் தூங்க வைப்பீர்கள். "காக்கா காக்கா பறந்து வா" என்று பாடி விளையாடுவீர்கள். உங்கள் பாட்டுச் சத்தத்தை காணவில்லையே! எங்கே அப்பா இருக்கிறீர்க்ள்...? இனி எப்போது நான் உங்கள் பாட்டைக் கேட்பது?

**அருமைப் பேரன்**
**டனிசன்**

தாத்தா.... நான் அழக்கூடாதென்று, கையில் வைத்து ஆட்டுவீர்களே.... கதையும் பாட்டும் சொல்லி சிரிக்க வைப்பீர்களே...., இப்போது நான் அழுதால் அம்மா, அம்மம்மா, பெரியம்மா எல்லோரும் வருகிறார்கள்.... ஆனால் யாரும் பாட்டுப் பாடுவதில்லை... ஏன் எல்லோரும் இருந்தும் உங்களை மட்டும் காணவில்லை? எப்போது நான் மீண்டும் உங்களைப் பார்ப்பது? எப்போது உங்கள் பாட்டை மீண்டும் கேட்பது?

**ஆசைப் பேரன்**
**தனிஸ்க்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

வருடங்கள் முப்பத்தைந்துக்கு மேல் உருண்டோடி விட்டாலும் எங்கள் அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய அத்தான் அவர்களை மனம் மறக்காது.

எங்கள் சகோதரியை இவர் திருமணம் செய்த போது நாங்கள் எல்லோருமே இளைஞர்கள், சரியான வழியைத் தெரிவு செய்து வாழ்க்கையைக் கொண்டு செல்ல, திரும்பும் திசை எல்லாமே சரியானதாய்த் தோன்றுகின்ற பருவம். அந்த நேரத்தில் இவர் எங்கள் வீட்டின் மருமகனாக வந்த போதும் எங்கள் பெற்றோருக்கு இன்னுமொரு மகனாக இருந்து எங்களை அன்பாக வழி நடத்திய அந்தக் காலம் மனத்திரையில் விரிகிறது.

இனிமையான சுபாவம், அன்பான பேச்சு இவற்றினால், எங்களை அந்த இளம் பராயத்திலேயே மிக விரைவாக, அதே நேரம் இயல்பாகக் கவர்ந்தார். தனது உத்தியோகத்தையும் கடமையையும் பொறுத்தவரையில் ஒரு பாடசாலை ஆசிரியராக, ஒரு அதிபராக, அதன் பின் கல்வித் துறையிலே ஒரு உயர் அதிகாரியாகக் கடமை ஆற்றி எல்லோரையும் தனது பண்பான நடத்தையால் வசீகரித்த அவரது குணம் போற்றுதற்குரியது.

குடும்ப வாழ்க்கையிலும் ஒரு அன்பான கணவனாக, பாசம் மிக்க ஒரு தந்தையாக அவர் ஆற்றிய பங்கு யாவரும் அறிந்த ஒரு விடயம். தன் குடும்ப முன்னேற்றத்திற்காகவும், பிள்ளைகளின் எதிர்காலத்திற் காகவும் முன் கூட்டியே திட்டமிட்டு, அவர்களுக்கு நல்லதொரு எதிர்காலத்தையும், வாழ்க்கையையும் அமைத்துக் கொடுத்திருக்கிறார் என்றால் அது மிகையாகாது.

எல்லாவற்றையும் விட இறுதிமூச்சு அவரைவிட்டு பிரியும்வரை, எந்த தீய பழக்கத்திற்கும் ஆட்பட்டுவிடாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருக்கும் முன்னுதாரணமாகத் திகழ்ந்ததை எளிதில் மறந்துவிட முடியாது.

காலத்தின் கணக்கிற்குக் கட்டுப்பட்டே ஆக வேண்டிய வாழ்வின் முடிவிற்கு, இவ்வளவு விரைவில் அவர் ஆளாவார் என நாங்கள் யாருமே எதிர்பார்த்திருக்கவில்லை. ஆதலால் தான் எங்கள் மனம் தாங்கவொண்ணாத் துயரடைகிறது. விழிநீரை அடக்கிக் கொண்டும், மனச்சுமையைத் தாங்கிக் கொண்டும் எங்களின் தந்தையைப் போல் எங்களிடம் அன்பு செலுத்திய எங்கள் அத்தானின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மைத்துனர்மாரும், மைத்துனிமாரும்**
**குடும்பத்தினரும்.**

## மூன்று சக்திகள்!

உண்மை, தூய்மை, சுயநலமின்மை ஆகிய இந்த மூன்றும் எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ அவற்றைப் பெற்றிருப்பவர்களை நசுக்கக்கூடிய ஆற்றல் விண்ணுலகிலோ, மண்ணுலகிலோ எங்குமோ கிடையாது. இந்த மூன்றையும் பெற்றுள்ள ஒருவனைப் பிரபஞ்சம் முழுவதுமே எதிர்த்து நின்றாலும் அதை எதிர்த்து நிற்கக்கூடிய ஆற்றல் அவனுக்கே உண்டு.

**(சுவாமி விவேகானந்தர்)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவினர்களின் மனக்குமுறல்.....

அன்று வியாழக்கிழமை வவுனியாவிலிருந்து கொழும்புக்கு புகையிரதத்தில் வந்து கொண்டிருந்தேன். இரவு 8.30 மணியளவில் எனது தொலைபேசியில் கனகேந்திரம் அத்தான் காலம் சென்று விட்டார் என்ற செய்தி கேட்டு நம்ப முடியாமல் இடிந்து போய்விட்டேன். பொய்யாக இருக்கக் கூடாதா என்ற நப்பாசையில் திரும்பவும் கேட்டேன். உண்மை தான் என்றார்கள். நான் எத்தனையோ முறை கவலையோடு அவர்கள் வீட்டுக்கு வருவேன். ஒரு சகோதரனாக என்னை ஆதரித்து இருவரும் ஆறுதல் சொல்லி அனுப்பி வைப்பார்கள். இனி அவரை எங்கு போய்த் தேடுவேன்? எனக்கு ஆறுதலாக இருந்த ஒருவரை இழந்து நிற்கிறேன். அவரது ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**மைத்துனி**
**தங்கமணி**

தாயகம் நாடி வந்த உங்களைத் தாய்ப்பூமி
அரவணைத்த அவலம் என்னவோ?
மாமா, எம்மை விட்டு நீங்கள்
நீங்கிச் சென்றாலும் உங்கள்
அன்பும் ஆதரவும் நினைவுகளாக
எம்மோடு என்றும் நிலைத்து நிற்கும்
மண்விட்டு விண் சென்ற உங்கள்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

**மருமக்கள்**
**கஸ்தூரி, பிரணவி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் பாசமிகு அம்மப்பாவே

நான் பிறந்ததிலிருந்து உங்களைப் பார்த்ததில்லை, பல்வேறுபட்ட இடம்பெயர்வுகளாலும் யுத்த காரணங்களாலும்...

ஆண்டுகள் பல ஓடின. எனது உயர்தரப் படிப்பிற்காக நான் கொழும்பு வந்தேன். முதன்முதலாக உங்கள் வீட்டில் உங்களுடன் தங்கினேன். அந்த நாட்கள், அந்த அனுபவம் என்னால் மறக்க முடியவில்லை. நான் அங்கு படிக்கும்போது எல்லாம் எனக்கு பல அறிவுரைகள் சொன்னீர்கள். எனது பாடப்பரப்பைப் பற்றிக் கேட்டீர்கள். என்னாலும் சாதிக்க முடியும் என்பதை உணர்த்தினீர்கள். நான் உங்களுடன் தங்கியிருந்த போது உங்களைக் கூர்மையாக அவதானித்தேன். காலையில் எழுந்ததும் தொலைக்காட்சி பார்த்து செய்திகளை அறிவது உங்கள் வழக்கமாக இருந்தது. எப்போதும் நீங்கள் அமைதியைப் பேணுவீர்கள். எனக்கு அது மிகவும் பிடிக்கும். எந்த வேலையையும் பொறுமையுடனும் அவதானத்துடனும் செய்யும் குணத்தை உங்களிடமிருந்தே நான் கற்றுக்கொண்டேன். நான் உங்களுடன் இருந்தபோது உங்களை என் தந்தையாக நினைத்திருந்தேன். நீங்களும் எந்தக் குறையுமின்றி உங்கள் பிள்ளைகளைப் போல் என்னையும் பார்த்துக் கொண்டீர்கள்.

நீங்கள் உங்கள் பிள்ளைகளைப் பார்ப்பதற்காக வெளியூர் செல்ல ஆயத்தமானீர்கள். எனக்கு உங்களைவிட்டு பிரிய கஷ்டமாக இருந்தது. என்ன செய்வது வாழ்க்கையில் பிரிவுகள் ஏற்படுவது வழக்கம் என மனதைத் தேற்றிக் கொண்டேன். நீங்கள் வெளியூர் சென்றாலும் உங்களைத் தினந்தோறும் நினைப்பேன். உங்களைப் போல் வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்று அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொள்வேன்.

மூன்று மாதங்களின் பின் நான் எனது பல்கலைக்கழக படிப்பிற்காக பயிற்சி பெற வேறு இடம் சென்றிருந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் எங்கள் ஊருக்கு வருவதாக முன்பே அறிந்திருந்தேன். ஆனால், உங்களைப் பார்ப்பதற்கான சந்தர்ப்பம் எனக்கு கிடைக்கவில்லை. மூன்று நாட்களின் பின் அதிர்ச்சியடைய வைத்த அந்தச் செய்தியைக் கேட்டதும் எனக்கு கனவா, நிஜமா என்று புரியவில்லை. இருந்தாலும் அது நிஜம்தான். அந்த நாள்... என்னால் மறக்க முடியவில்லை. உங்கள் இறுதிச் சடங்குகளில் கூட என்னால் வந்து பங்குபெற முடியவில்லை. எனக்கு மிகவும் கவலையாக இருந்தது. பரமேஸ்வரி அம்மம்மாவுடன் தொலைபேசியில் உரையாடினேன். அவரது குரலில் பயம், நடுக்கம், சோகம் இருப்பதை உணர்ந்தேன்.

என்னதான் அம்மப்பா நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவுகள் செதுக்கிய சிற்பங்களாக என்றும் எங்கள் மனதில் நிலைத்து நிற்கும் சோகக்கண்ணீருடன் நான் உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன்.

**பேரன். ந.புரவலன்.**



# இல்லைஎன்று சொல்லாதே!

**இல்லை என்று ஒருபோதும் சொல்லாதே. "என்னால் இயலாது" என்று ஒரு நாம் சொல்லாதே. ஏனெனில் நீ வரம்பில்லா வலிமை பெற்றவன். உன்னுடைய உண்மை இயல்போடு ஒப்பிடும் போது காலமும் இடமும் கூட உனக்கு ஒரு பொருட்டல்ல. நீ எதையும், எல்லாவற்றையும் சாதிக்கக் கூடிய சர்வ வல்லமை படைத்தவன் நீ!**

**(சுவாமி விவேகானந்தர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பனின் உள்ளத்திலிருந்து....

அமரர் திரு. செ. கனகேந்திரம் அவர்கள் எனது நீண்டகால நண்பன். கொக்குவில் கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியில் உயர்தர வர்த்தக தராதரப் பத்திர வகுப்பில் கற்றவேளை எமது நட்புத் தொடங்கியது. நாம் பலாலி ஆசிரியர் கலாசாலையில் ஆசிரிய மாணவர்களாக கற்றவேளை அந்நட்பு ஆழவேரூன்றிக் கிளை பரப்பிப் பெருவிருட்சமாக வளர்ந்தது. அங்கு விடுதி மண்டபத்தில் இருவரும் அருகருகே கட்டிலில் தூங்கி ஒன்றாக உண்டு உடுத்தி உறவைப் பெருக்கிய நாட்கள் மறக்க முடியாதவை.

அவரின் அடக்கமான பண்பு என்னை மாத்திரமன்றி அங்கிருந்த ஏனைய பயிலுனர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள், அனைவரையும் கவர்ந்தது. அதனால் எல்லோரும் அவர்பால் ஏதோ இனம் புரியாத ஒரு மரியாதை வைத்திருந்தனர். அது மாத்திரமன்றி அவர் மற்றவர்களுடன் உரையாடும்போது உள்ள அன்பு, கனிவு, நகைச்சுவை ததும்பும் வார்த்தைகள் எல்லாம், கேட்போரை கவர்ந்து ஈர்த்து தன்வயப்படுத்துவனவாக அமைந்தன.

ஆசிரியர் பயிற்சியின் பின் நாங்கள் இடம் மாறியபோதும் எமது நட்புத் தொடர்ந்தது.

அவரிடம் காணப்பட்ட கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய பண்புகள், அவரை ஆசிரியருலகில் மாத்திரமன்றிச் சமூகத்திலும் அனைவராலும் மதிக்கப்பட்டவராகவும் பதவி உயர்வுகளைத் தாங்க வேண்டியவராகவும் ஆக்கின. இதனால் அவர் கடமையாற்றிய பாடசாலைகளில் எல்லாம் பாடசாலைச் சமூகம் அவரை மேலான நிலையில் வைத்துப் போற்றியது.

மொத்தத்தில், அவர் ஒரு புருடத்துவம் மிக்க ஆசிரியர், அதிபர், உதவிக் கல்விப் பணிப்பாளர், அதிசிறந்த நண்பர் யாருடனும் முரண்படாத பண்பு அவருக்கே தனித்துவமானது. அவர் மறக்க முடியாத, பண்புபட்ட ஓர் உத்தமர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் திடீரென எம்மை விட்டுப் பிரிவார் என்று ஒருவரும் எதிர்பார்த்திலர். அவரின் மரணச் செய்தி என்னால் நம்பமுடியாத ஒரு பேரதிர்ச்சியை எனக்குத் தந்தது.

இப்படியான ஓர் உத்தமரை திடீரென இழந்து தவிக்கும் அவரின் குடும்பத்தினரின் கவலையில் நானும் என் பங்கைப் பகிர்ந்து கொள்வதன்றி வேறொன்றும் அறிகிலேன்.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை எனும்
பெருமையுடைத்து இவ்வுலகு" என எண்ணி
அமைதியடைவோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



க. பழனிவேற்பிள்ளை
ஓய்வு நிலை அதிபர்,
உதவிக் கல்விப் பணிப்பாளர்
துணுக்காய் கல்வி வலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆழமான கல்விப் புலமையும் அருமையான பண்பும் அமையப்பெற்ற அற்புதமான மனிதர் கனகேந்திரம்

ஆழமான பாடப்புலமையும் அற்புதமான கற்பித்தற் திறனுங் கொண்ட முரசுமோட்டையில் மதிப்பும் மரியாதையுடனும் ஆசிரியராக இருந்த இவரைத் திரு. சண்முகநாதன் அறிந்தார். நீதியும் நேர்மையுங் கொண்ட இவரை கிளிநொச்சி மத்திய கல்லூரி அதிபராக இருந்த சண்முகநாதன் எடுத்து, தனக்கு இருந்த பல பொறுப்புக்களை இவரிடம் ஒப்படைத்தார். பின்னர் கிளிநொச்சி மத்திய கல்லூரி அதிபர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நான், இவரைப் பிரதி அதிபராக்கி மேலும் பொறுப்புக்களைக் கொடுத்தேன்.

அந்நாட்களில் கிளிநொச்சிக் கொத்தணியின் மூலாதாரப் பாடசாலையாக மத்திய கல்லூரி இருந்தது. இக்கொத்தணியில் ஒன்பது பாடசாலைகள் இருந்தன. மத்திய கலலூரியின் அதிபராக இவர் திறம்படக் கடமையாற்றியதாலேயே, நான் கொத்தணிப் பாடசாலைகளை முகாமை செய்யக்கூடியதாக இருந்தது. இந்தக் கொத்தணி முறை பல வருடங்களாக நீடித்தது. நாளுக்கு நாள், ஆண்டிற்கு ஆண்டு, இவருடைய பொறுப்புக்களும் அதிகரித்தன. இவர் ஒரு முழுமையான அதிபராகவே திகழ்ந்தார்.

அந்நாட்களில் இவரை ஒரு பாடசாலையின் அதிபராக்க முயன்றேன். இதை அவர் விரும்பவில்லை. இருக்கிறது போதும், என்ற நிறைவான உணர்வோடு இருந்தார். பின்னர் ஒரு பிரச்சனையான பாடசாலைக்கு அதிபர் தேவைப்பட்டார். கல்வித் திணைக்களம் பல அதிபர்களை நியமித்தும், முறைப்பாடுகள் குறையவில்லை. இறுதியாகப் பெற்றாரும் நலன்விரும்பிகளும் இவரது பெயரைக் குறித்துக் கேட்டனர். இவர் ஏற்கவில்லை. கல்விப் பணிப்பாளர் மன்றாட்டமாக இக்கோரிக்கையை விட்டார். மனமில்லாமல் ஏற்றுப் போனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது உறவு, உரையாடல் யாவும் போற்றப்படக் கூடியவை. பாரதி குறிப்பிட்டது போன்று உள்ளத்தில் உண்மை ஒளியுண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும் என்பது போல் இவருடைய அறிவு, ஆற்றல், அனுபவம், அணுகுமுறைக்கு முன், சிக்கல் யாவும் பகலவனை கண்ட பனிபோல் ஆயின. இவர் இப்பாடசாலையின் அதிபர் கடமைகளிலும், கோட்ட மட்ட கல்வி சார்ந்த தொழிற்பாடுகளிலும், இணைபாடச் செயற்பாடுகளிலும், மாவட்ட மட்ட கல்வி செயற்பாடுகளிலும், ஒரு ஈடு இணையற்றவராகத் திகழ்ந்தார். கல்விப் புலத்திலுள்ள முக்கிய புள்ளிகளின் கண்பட்டவராக இருந்தார்.

இவரை ஒரு அதிபராக்க வேண்டும் என்று நான், மனதார விரும்பினேன். விரைவில் அது நிறைவுற்று பெயர் புகழோடு அதிபராக நிலைபெற்றார். இவரது பாட ரீதியான புலமைக்கும் முகாமைத்துவ திறமைக்கும் மதிப்பளித்து பாராட்டு முகமாக இவருக்கு உதவிக் கல்விப் பணிப்பாளர் நியமனம் கிடைத்தது. இதேநாளில் எனக்கும் உதவிக் கல்விப் பணிப்பாளர் நியமனம் கிடைத்தது. இவரது சீரான வளர்ச்சி கண்டு கல்விச் சமூகம் பெருமைப்பட்டது, மகிழ்வுற்றது.

இவர் பின்னர் கோட்டக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றார். ஒரு கஷ்டமான பிரதேசத்தில் போக்குவரத்துக்கள் சீரற்ற காலத்தில் திறம்படக்கடமை புரிந்து ஓய்வு பெற்றார். அன்பும் பண்பும் நிறைந்த மனைவி மக்களுடன் அவர்களின் சுகதுக்கத்தில் பங்குகொண்டு பாங்காக வாழ்ந்து கொண்டிருக்கையில் எல்லோரும் ஆச்சரியப்படத்தக்க வகையில் கொடுங்காலன் கவர்ந்தான்.

இவர் எமது கல்லூரியில் கடமையாற்றிய காலத்தில் தன் இரு மகள்மாரையும் எமது கல்லூரியிலேயே கல்வி கற்க வைத்தார். இவரின் பிள்ளைகள் எமது கல்லூரியில் கல்வி கற்பதால் உயர் பதவிகளில் இருந்த பலர், தமது பிள்ளைகளைச் சேர்த்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது பிள்ளைகள் கல்வியில் உயர் நிலையடைந்தனர், மற்றைய பிள்ளைகளும் உயர்வு பெற்றனர். இவரது குடும்ப கல்விப் பாரம்பரியங்களாலும் பண்பாட்டு குணாதிசயங்களாலும் எமது கல்லூரி பேரும் புகழும் பெற்றது.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்".

என்ற குறளுக்கு அமைந்து வாழ்ந்த இவர், இறைவன் திருவடிகளில் சேர்ந்து நிரந்தரமான அமைதி பெறவும் இவரது மனைவி, மக்கள், மருமக்கள், உற்றார், உறவினர், ஊரவர்கள், நண்பர்கள் யாவரும் அமைதி பெறவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வழிபடுகிறேன்.

**அமைதி அமைதி அமைதி**

"சாந்தி"
எண் ~ 08 கனகபுரம்
கிளிநொச்சி.

நா.சோதிநாதன்
முன்னாள் அதிபர்
கிளிநொச்சி மத்திய கல்லூரி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற் செய்தி

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய காலத்தில் திரு. செ. கனகேந்திரம் முறைசாராக் கல்விப் பிரிவிற்குப் பொறுப்பான உதவிக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வந்துள்ளார். ஒரு சில தினங்களுக்கு முன் இவர் மரணித்த செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றேன். ஐந்து வருடங்களுக்கு மேலாக ஒரே அலுவலகத்தில் பணிபுரிந்து வந்துள்ளோம். இவ் வலயத்திலுள்ள ஏனைய ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் எல்லோருக்கும் மூத்தவராக வழிகாட்டியாக திகழ்ந்து வந்துள்ளார். பாடசாலைகளில் மாலை வேளைகளில் நடைபெறுகின்ற தொழிற்பயிற்சி சார்பான கற்கை நெறிகளையும் இடைவிலகிய மாணவர்கட்கான எழுத்தறிவூட்டல் வகுப்புக்களையும் மேற்பார்வை செய்து வருவது மட்டுமன்றி காலை வேளைகளிலும் பாடசாலைகளை தரிசித்து கல்வி அடைவு மட்டத்தை உயர்த்தக்கூடிய வழிகாட்டல்களை அதிபர் ஆசிரியர்கட்குச் சொல்லி வழிகாட்டுவார்.

வலயச் செயற்பாடுகளில் பொது நிகழ்வுகளை ஏற்படுத்துவதிலும் பங்கு கொள்வதிலும் என்றும் பின்னிற்பதில்லை. மாணவர்களின் எதிர்கால வேலைவாய்ப்புகள், தொழில் வழிகாட்டல், தலைமைத்துவப் பயிற்சி போன்றவற்றை ஏற்படுத்தி மாணவர்களுக்கான வழிகாட்டல்களைப் பெரிய பாடசாலைகளில் செய்து வருவார்.

இவ் வலயத்தின் பல்வேறுபட்ட தூரங்களில் அமைந்துள்ள பாடசாலைகளில் துவிச்சக்கரவண்டி உதவியுடன் சென்று மேற்பார்வை செய்வார். அரசசார்பற்ற, அரச நிறுவனங்களிலிருந்து மாணவர்களுக்கான உதவிகளைப் பெற ஆக்கபூர்வமாகப் பணியாற்றி வந்துள்ளார்.

தனது 60ம் வயதில் ஓய்வில் சென்றிருந்தபோதிலும் வலயக்கல்வி அலுவலகத்திற்கு வருகைதந்து உரையாடி வருவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித விழுமியங்களையும், சமயம் சார்பான செயற்பாடுகளிலும் ஒழுக்கம் சார்பான வகையிலும் சிறப்பாக வாழ்ந்து வந்த திரு. செ. கனகேந்திரம் தனது பிள்ளைகளை ஓர் உன்னத நிலைக்கு கொண்டுவந்து, எதிர்கால வாழ்க்கைக்காக அவர்களைத் தயார்ப்படுத்தியமை அவர் செய்த பணிக்காக இறைவன் கொடுத்த காணிக்கை ஆகும். பிள்ளைகளின் சிறப்பான வாழ்வு அவரது ஆத்ம சாந்திக்கு துணை செய்யும் இவ்வேளையில் அவரது இழப்பில் நானும் பங்கேற்று இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**த.மேகநாதன்**
**வலயக் கல்விப் பணிப்பாளர்**
**துணுக்காய்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. செல்லத்துரை கனகேந்திரம் அவர்கள் மறைந்த செய்திகேட்டு மனதுள் சிறு நெருடல் ஏனெனில் அவர் தற்போதும் நம்மில் ஒருவராக இருப்பதாகவே உள்ளுணர்வு. ஆம் அவர் வர்த்தக பாட ஆசிரியராக எமது கல்லூரியில் உலா வந்தார். சாதாரண தர, உயர்தர மாணவர்களுக்கு வர்த்தக பாடத்தை சிரத்தையுடன் போதிக்கும் ஆசானாகத் திகழ்ந்தார். கால நகர்வுகளின் ஊடே எமது கல்லூரியின் பிரதி அதிபராகக் கடமையாற்றினார். கடமையாற்றிய காலங்களில் அவர் பிரதி அதிபராக மட்டுமல்லாது தந்தையாக, நண்பனாக, ஆசானாக அனைவருடனும் அன்பாகப் பணி புரிந்தவர். கடமையில் கண்ணியம் மிக்கவர். கல்லூரிப் பணிகளில் அதிபருக்கு ஒத்தாசையாக செயற்பட்டவர். அமைதியும், அன்பும், மென்மையான சுபாவமும் எல்லோருக்கும் உதவி புரிகின்ற உளப்பாங்கும் உடையவர்.

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்
புன் கணீர் பூசல் தரும்"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிக்கிணங்கப் பணிபுரிகின்ற காலங்களில் மட்டுமல்லாது எப்பொழுதும் அன்பாகவே இருந்து செயற்பட்டவர்.

கல்லூரியில் கல்வித்துறை மட்டுமல்லாது இணை பாடவிதானச் செயற்பாடுகளும் சிறப்புற்று இடம்பெற வேண்டும் என்பதில் கருத்தாக இருந்தவர். கல்லூரியில் செவ்வாய்க்கிழமைகளில் இடம்பெறும் ஒன்றுகூடலில் திரு. செ. கனகேந்திரம் (பிரதி அதிபர்) அவர்கள் வழங்கும் நற்சிந்தனைகள் ஆசிரியர்கள் மனதில் மட்டுமல்லாது மாணவர்களையும் வளப்படுத்தக் கூடியதாக அமைந்தது சிறப்பானதாகும். இன்றும் செவ்வாய்க்கிழமைகளில் ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடும் போது எமது பிரதி அதிபரை, அவரது நற்சிந்தனைகளையே எமது மனக் கண்ணில் கொண்டுவர முடிகின்றது. அப்படியானதொரு வெள்ளிப் பிரார்த்தனையின் போதே அவரின் பிரிவுச் செய்தியும் அறிய முடிந்தது வேதனைக்குரியதானது.

மாணவனாக, ஆசிரியனாக இக் கல்லூரியில் இருந்த வேளை அவரின் ஆலோசனைகள் எனக்குக் கிடைக்கப் பெற்றமை அரிய வரப்பிரசாதமாகும். தற்போது அதிபராகக் கடமை புரிகின்ற போதும் அவரின் ஆலோசனைகளும், அறிவுரைகளும் எனக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளன.

அவரின் ஆத்மா சாந்தி அடைய கல்லூரிச் சமூகத்தின் சார்பில் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**மு. இரவீந்திரன்**
**அதிபர்**
**கிளி/கிளிநொச்சி மத்தியகல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புமிக்க ஆசானுக்கு என் கண்ணீர் வரிகள்

என்னுடைய அன்புக்கும் மதிப்புக்குமுரிய கணக்கியல், வர்த்தகம் ஆகிய பாடங்களின் ஆசிரியரும் எம் மாவட்டத்தில் புகழ்பூத்த அதிபர்களில் ஒருவரும், உதவிக் கல்விப் பணிப்பாளருமாகிய, அமரர் கனகேந்திரம் அவர்களின் மரணச்செய்தி பத்திரிகை மூலமே எனக்கு கிடைத்தது. சற்றும் எதிர்பார்க்க முடியாத இச்செய்தியை என் மனம் ஏற்க மிகச் சஞ்சலப்பட்டது. நல்ல இளமையும், துடிப்பும், இயங்குசக்தியும் கொண்டிருந்த ஒரு விடாமுயற்சியாளன் இவ்வளவு விரைவாக எம்மிடமிருந்து பறிக்கப்பட்டது வியப்புக்குரியது. கிளிநொச்சி மத்திய கல்லூரியில் அவர் கற்பித்த காலத்தில் யப்பானிய மோட்டார் சைக்கிள்கள் அறிமுகமாகிய காலம். அவரது ஹொண்டா நீல சைக்கிளை நாம் அடிக்கடி தொட்டுப் பார்ப்போம். அப்போது அவர் சொல்வார் "இது நீங்கள் உழைத்து வாங்கியே ஓட வேண்டும்" என்பார். அதனைவிட ஒரு மகுட வாசகம் அவருக்குரியது. அவர் எப்போதும் சொல்வார் "குதிரைக்கு தண்ணீரை கொடுக்கலாம் ஆனால் குதிரைதான் தண்ணீர் குடிக்க வேண்டும்". எவ்வளவு பெரிய ஆசிரியத்துவம்! ஆசிரியன் ஒரு வழிகாட்டி மட்டுமே மாணவனின் தன்னார்வம் இணையும்போது அவன் சாதனைகளை செய்யமுடியும் என்ற உயரிய இலட்சியத்துடன் எம்மை வளர்த்தவர். எமது மாவட்டத்தின் கல்வி வரலாற்றில் 1980களில் இருந்து தனது சுவட்டைப் பதித்திருந்த இவரால் உருவாக்கப்பட்ட பல மாணவர்கள் எம் மாவட்டத்தின் வளர்ச்சியில் பொறுப்பார்ந்த பங்காளிகளாக செயற்படுகின்றனர். மரணத்துக்கு சில வாரங்களுக்கு முன்னர் கூட என்னை நாடி வந்து நலன் விசாரித்து நம்மை பார்க்கும் போது தனக்கு மகிழ்ச்சி என்பார். காணுமிடமெல்லாம் அறிவுரை தருவார். அவரது நல்ல மனதிற்கு அவரின் பிள்ளைகள் அவரது எதுபார்ப்பை பூர்த்தி செய்து திருப்திப்படுத்தியுள்ளார்கள். மரணம் என் அன்புக்குரிய கனகேந்திரம் சேர் அவர்களைப் பிரித்தாலும் அவரால் வளர்க்கப்பட்ட எம் உள்ளத்தில் அவருக்கு ஒரு நிலையான இடம் எப்போதும் இருக்கும். அவரை இழந்து தவிக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது இதயபூர்வமான அஞ்சலிகள்.

*அன்புடன் மாணவன்*

*அ.கேதீஸ்வரன்* **(BA Hons) MPIL (ECN)**
*உதவி திட்டமிடல் பணிப்பாளர்*
*மாவட்ட செயலகம்*
*கிளிநொச்சி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வ காயத்ரிகள்

**கணேச காயத்ரி**

ஓம் ஏகதன்ஷ்ராய வித்மஹே/வக்ர துண்டாய தீமஹி,/ தன்னோ புத்தி:ப்ரசோதயாத்./

**சிவ காயத்ரி**

ஓம் பஞ்ச வக்த்ராய வித்மஹே/மஹாதேவாய தீமஹி,/ தன்னோ ருத்ர:ப்ரசோதயாத்./

**துர்கா காயத்ரி**

ஓம் கிரிஜாயை வித்மஹே/சிவ ப்ரியாயை தீமஹி,/ தன்னோ துர்கா: ப்ரசோதயாத்./

**லக்ஷ்மி காயத்ரி**

ஓம் மஹாலக்ஷ்மியை வித்மஹே/விஷ்ணு ப்ரியாயை தீமஹி,/ தன்னோ லக்ஷ்மீ:ப்ரசோதயாத்.

**சரஸ்வதி காயத்ரி**

ஓம் ஸரஸ்வத்யை வித்மஹே,./ப்ரஹ்ம பத்னியை தீமஹி,/ தன்னோ தேவீ: ப்ரசோதயாத்.

**விஷ்ணு காயத்ரி**

ஓம் நாராயணாய வித்மஹே/வாஸு தேவாய தீமஹி,/ தன்னோ விஷ்ணு:ப்ரசோதயாத்./

**கிருஷ்ண காயத்ரி**

ஓம் தேகீ நந்தனாய வித்மஹே,./வாஸு தேவாய தீமஹி,/ தன்னோ க்ருஷ்ண:ப்ரசோதயாத்./

**ராம காயத்ரி**

ஓம் தசரதாத்மஜாய வித்மஹே/ஸீதா வல்லபாயை தீமஹி/ தன்னோ ராம:ப்ரசோதயாத்./

**அனுமன் காயத்ரி**

ஓம் அஞ்சனீ சுதாய வித்மஹே,./வாயு புத்ராய தீமஹி,/ தன்னோ மாருதி:ப்ரசோதயாத்./



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரப்பாக்கள்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவ னன்றே

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலாப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அறிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள்நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தான மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாத
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசிப முனிவர் அருளிய

# காரிய சித்தி மாலை

திருச்சிற்றம்பலம்.

பந்தம் அகற்றும் அநந்தகுணப்
பரப்பும் எவன் பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து சுரக்குமோ
சந்த மறை ஆகமங் கலைகள்
அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம்.

உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருளெவனவ்
வுலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டுங் களைக்கண் எவன் அந்த
உலக முதலாம் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம்.

இடர்கள் முழுதும் எவனருளால்
எரிவீ ழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவு மருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத்
திறத்தி னாலும் உயிர்க்குநலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப் பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப்படும் அப் பொருள்யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன் யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில்
ஊட்டி விடுவிப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம்.

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம்நவிலும்
விமலன் யாவன் விறங்குவர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன் எண்குணன் எவன் அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

மண்ணின் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன் நீர் இடைநான்காய்
நண்ணி அமர்வான் எவன் தீயின்
மூன்றாய் நவில்வான் எவன் வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன்வான் இடைஒன்றாம்
அண்ணல் எவன் அக்கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாச அறிவில் பசு அறிவில்
பற்றற் கரிய பரன்யாவன்
பாச அறிவில் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அவன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக்கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம்.

## மாங்கல்யம் பலம் பெற சொல்ல வேண்டிய மந்திரங்கள்

மங்களே மங்கள தாரே
மாங்கல்ய மங்களப்ரதே
மங்களார்த்தம் மங்களே ஸ்ரீ
மாங்கல்யம் தேஹிமே ஸதா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்

(ஔவையார் அருளியது)

திருச்சிற்றம்பலம்

சீதக் களபச் செந்தாமரைப்பூம்
பாதச்சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரைஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழகெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற்குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிருபுயமும்
மூன்று கண்ணும் மும்மதச்சுவடும்
இரண்டுசெவியும் இலங்குபொன்முடியுந்
திரண்ட முப்புரி நூல் திகழொளிமார்பும்
சொற்பதங்கடந்த துரியமெய்ஞ்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக்களிறே
முப்பழநுகரும் மூஷிகவாகன
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாயெனக்குத் தானெழுந்தருளி
மாயாப்பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதல் ஐந்தெழுத்தும் தெளிவாய்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடிவாகிக் குவலயந்தன்னில்
திருவடிவைத்துத் திறமிது பொருளென
வாடாவகைதான் மகிழ்ந்தெனக்கருளிக்
கோடாயுதத்தாற் கொடு வினைகளைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன்செவியில்
தெவிட்டாத ஞானத்தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்குமுபாயம்
இன்புறுகருணையின் இனிதெனக்கருளிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கருவிகள் ஒடுங்குங் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள்கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக்கருளி
ஒன்பதுவாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக்கதவை அடைப்பதுங் காட்டி
ஆறாதாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைப்பிங்கலையின் எழுத்தறிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண்டலத்தின் முட்டியதூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலியதனிற் கூடிய அசபை
விண்டெழுமந்திரம் வெளிப்படவுரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழுகனலைக்
காலால் எழுப்புங் கருத்தறிவித்தே
அமுதநிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முகமாக இனிதெனக்கருளிப்
புரியப்பட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியட்டு நிலையும் தெரிசெனப்டுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்திமுத்தி இனிதெனக்கருளி
என்னையறிவித்து எனக்கருள்செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடமென்ன
அருள்தரு மானந்தத் தழுத்தியென் செவியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டி
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய்க்
கணுமுற்றிநின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த்தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக்கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனையாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோளறு திருப்பதிகம்

**திருச்சிற்றம்பலம்**

வேயுறு தோளிபங்கள் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தென்
னுளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
னுளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட் டொடாறு
முடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
வுமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமே லணிந்தென்
னுளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெறி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிநுதல் மங்கையோடு வடபா லிருந்து
மறையோது மெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென்
னுளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுண நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

நஞ்சணி கண்டனெந்தை மடவாள்த னோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தென்
னுளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் முருமிடியு மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வாள்வரி யதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள்த னோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தெ
னுளமே புகுந்த அதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பிள முலைநன் மங்கையொரு பாகமாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியுமப்பு முடிமே லணிந்தெ
னுளமெ புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பத்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து
மடவாள்த னோடு முடனாய்
வான்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தெ
னுளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்ற னோடு
மிடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறு மெங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனுமாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமே லணிந்தென்
னுளமே புகுந்த அதனால்
புத்தரொ டமணைவாதி லழிவிக்கு மண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொ னெங்கும் திகழ
நான்முக னாதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளுநாளு மடியாரை வந்து
நலியாத வண்ண முரைசெய்
ஆனசொல் மாலையோது மடியார்கள் வானில்
அரசாள்வ ராணை நமதே.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்



திருச்சிற்றம்பலம்

தொல்லை யிலும்பிறவி சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம் என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன் றன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உண்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க
ஈச னடி போற்றி எந்தையடி போற்றி
தேச னடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத வின்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன் யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணுறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
சொல்லாஅ நின்றயித் தாவர சங்கமத்துள்
எல்லாம் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வென ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவு இறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறிநின்று
பிறந்த பிறப்பருக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட முடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோறும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தானி லாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தெசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்து பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றாமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையோனே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனே ஓஎன்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலங்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

நமசிவாய அஞ்செழுத்தும் நல்குமேல் நிலைகளும்
நமசிவாய அஞ்சில் அஞ்சும் புராணமான மாயையும்
நமசிவாய அஞ்செழுத்தும் நம்முளே இருக்கவே
நமசிவாய உண்மையை நன்குரைசெய் நாதனே!

~ *சிவவாக்கியர்* ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரத்தி

ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி
ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய அனுதினம் பாடிப் பணிந்தோம்
ஜெகமெங்கும் அமைதியைத் தா - ஓம் ஸ்ரீ ஜெய...

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவையெல்லாம் அடைய அம்மம்மா
தேவையெல்லாம் அடைய
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலெம்மை - ஓம் ஸ்ரீ ஜெய...

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈசுவரி வரமருள்வாய் அம்மம்மா
ஈசுவரி வரமருள்வாய்
கரங்குவித்தோம் இனி காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய் - ஓம் ஸ்ரீ ஜெய...

காசினி யெங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய்
அம்மம்மா கருத்தினில் அன்பருள்வாய்
தேசுடன் வாழ வழிகாட்டி டுவாய்
ரக்ஷிதேவியுன் அடைக்கலமே - ஓம் ஸ்ரீ ஜெய...

நமஸ்காரம் கூறி கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து அம்மம்மா
நல்லொளி தீபம் வைத்து
நமஸ்காரம் செய்து ஹாரத்தி செய்தோம்
ஞாலத்திற் கமைதியைத் தா ஓம் ஸ்ரீ ஜெய...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை



வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்க என் வெள்ளை உள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோ
சகமேழும் அளித்து
உண்டான் உறங்க வொழித்தான்
பித்தாக உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலா வல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற் கொடியே
கனதனக் குன்றும் ஐம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகல கலா வல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமுது
ஆர்ந்துன் அருட் கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடும்கொலோ
உளம்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலா வல்லியே.

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்
வடநூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலா வல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற்
பாத பங்கேருகம் என்
நெஞ்சத் தடத்து அலராதது என்னே
நெடுந்தாட் கமலத்து
அஞ்சத்துவசம் உயர்ந்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசு ஒத்திருந்தாய்
சகல கலா வல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுது எளிது எய்த
நல்காய் எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலா வல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனும் என்பார்
கூட்டும்படி நின் கடைக்கண்
நல்காய் உளம்கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலா வல்லியே.

சொல்விற் பனமும் அவதானமும்
கவி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்து அடிமை கொள்வாய்
நளினாசனம் சேர்
செல்விக்கு அரிதென்று ஒருகாலமும்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலா வல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கும் பொருட்கும் உயிராம்மெய்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலந்தோய் புழைக்கை
நற் குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்னம் நாண நடை
கற்கும் பதாம்புயத் தாயே
சகல கலா வல்லியே

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்டளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி
உண்டேனும் விளம்பில் உன்போற்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலா வல்லியே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் தோத்திரம்

திருச்சிற்றம்பலம்

கற்பூர நாயகியே கனக வல்லி
காளி மகமாயி கருமாரி அம்மா
பொற்கோவில் கொண்ட சிவகாமி அம்மா
பூவிருந்தவல்லி தெய்வ யானை அம்மா
விற்கோல வேதவல்லி விசாலாட்சி
விழிக்கோல மாமதுரை மீனாட்சி
சொற்கோவில் நான் அமைத்தேன் இங்கு தாயே
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே - கற்பூர

புவனம் முழுதும் ஆளுகின்ற புவனேஸ்வரி
புரம் எரித்தோன் புறம் இருக்கும் பரமேஸ்வரி
நவ நவமாய் வடிவாகும் மகேஸ்வரி
நம்பினவர் கைவிளக்கே ஸர்வேஸ்வரி
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி
கார் இருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி
உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி
உன்னடிமை சிறியேனை நீ ஆதரி - கற்பூர

உன்னிடத்தில் சொல்லாமல் வேறு எந்த
உறவிடத்தில் முறையிடுவேன் தாயே எந்தன்
அன்னையவள் நீ இருக்க உலகில் மற்ற
அன்னியரைக் கெஞ்சிடுதல் முறையோ அம்மா
கண்ணீரைத் துடைத்துவிட ஓடிவா அம்மா
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா
சின்னவனின் குரல் கேட்டு உன் முகம் திருப்பு
சிரித்தபடி என்னைத் தினம் வழி அனுப்பு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் இரண்டும் உன் உருவே காணவேண்டும்
கால் இரண்டும் உன் அடியே நாடவேண்டும்
பண் அமைக்கும் நா உனையே பாடவேண்டும்
பத்தியோடு கைஉனையே கூடவேண்டும்
எண்ணம் எல்லாம் உன் நினைவே ஆகவேண்டும்
இருப்பதெல்லாம் உன்னுடையது ஆகவேண்டும்
மண் அளக்கும் சமயபுர மாரியம்மா
மகனுடைய குறைகளையும் தீரும் அம்மா - கற்பூர

நெற்றியினுன் குங்குமமே நிறைய வேண்டும்
நெஞ்சில் உன் திருநாமம் வழிய வேண்டும்
கற்றதெல்லாம் மேன்மேலும் பெருக வேண்டும்
கவிதையிலே உன் நாமம் வாழ வேண்டும்
சுற்றம் எல்லாம் நீடூழி வாழ வேண்டும்
ஜோதியிலே நீஇருந்து ஆளவேண்டும்
மற்றதெல்லாம் நான் உனக்குச் சொல்லலாமா?
மடிமீது பிள்ளை என்னைத் தள்ளலாமா - கற்பூர

அன்னைக்கு உபகாரம் செய்வதுண்டோ?
அருள் செய்ய இந்நேரம் ஆவதுண்டோ?
கண்ணுக்கு இமை இன்றிக் காவல் உண்டோ?
கன்றுக்குப் பசுவன்றிச் சொந்தம் உண்டோ?
முன்னைக்கும் பின்னைக்கும் பார்ப்பதுண்டோ?
முழுமைக்கும் நீ எந்தன் அன்னையன்றோ?
எண்ணெய்க்கும் விளக்குக்கும் பேதமுண்டோ?
என்றைக்கும் நான் உன்றன் பிள்ளையன்றோ?-கற்பூர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புக்கே நான் அடிமை ஆக வேண்டும்
அறிவுக்கே என்காது கேட்க வேண்டும்
வம்புக்கே போகாமல் இருக்க வேண்டும்
வஞ்சத்தை என்நெஞ்சம் அறுக்க வேண்டும்
பண்புக்கே உயிர்வாழ ஆசை வேண்டும்
பரிவுக்கே நான் என்றும் பணிய வேண்டும்
என்பக்கம் இவை எல்லாம் இருக்க வேண்டும்
என்னோடு நீ என்றும் வாழ வேண்டும் - கற்பூர

கும்பிடவோ கை இரண்டும் போதவில்லை
கூப்பிடவோ நா ஒன்றால் முடியவில்லை
நம்பிடவோ மெய் அதனில் சக்தி இல்லை
நடந்திடவோ கால் இரண்டில் ஆகவில்லை
செம்பவள வாய் அழகி உன் எழிலோ
சின்ன இரு கண்களுக்குள் அடங்கவில்லை
அம்பளவு விழியாளே உன்னை என்றும்
அடிபணியும் ஆசைக்கோர் அளவும் இல்லை - கற்பூர

காற்றாகிக் கனலாகிக் கடலாகினாய்
கருவாகி உயிராகி உடலாகினாய்
நேற்றாகி இன்றாகி நாளாகினாய்
நிலவாகிப் பயிராகி உணவாகினாய்
தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்
தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்
போற்றாத நாள் இல்லை தாயே உன்னை
பொருளோடும் புகழோடும் வைப்பாய் என்னை-கற்பூர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவி துணை

ஓம் சக்தி

# கௌரி காப்பு



## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள் செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட் குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற் கா

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரி அம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகிஷா சுரனைக் கூறுபோட்டவளே
அசுரக்குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர் விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தலல்லோ பதி விரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமை அணைத்தே அருள்மாரி பொழிந்தாளே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்து விடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடுசெழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடுசெழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளையற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லமையே
காப்பேடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பாலபழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாரேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வந்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்த தெல்லாம் ஈடேறும்
நம்பியணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரி அம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி அணிவோர்க்கு
சித்தியெல்லாம் தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
இச்சகத்தி லோர்களெல்லா(ம்) ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி யெல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரி காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவி மகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெய ஜெய தேவி

ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி துர்க்கா தேவி சரணம்
ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி துர்க்கா தேவி சரணம்
ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி துர்க்கா தேவி சரணம்

துர்க்கை அம்மனை துதித்தால் என்றும் துன்பம் பறந்தோடும்
தர்மம் காக்கும் தாயாம் அவளை தரிசனம் கண்டால் போதும்
சர்வ வினைகளும் ஓடும் சர்வமங்களம் கூடும்

(ஜெயஜெய)

பொற்கரங்கள் பதினெட்டும் நம்மை சுற்றி வரும் பகைவிரட்டும்
நெற்றியிலே குங்குமப் பொட்டு வெற்றி பாதையைக் காட்டும்

(ஜெயஜெய)

ஆயிரம் கண்கள் உடையவளே - ஆதிசக்தியவள் பெரியவளே
ஆயிரம் நாமங்கள் கொண்டவளே தாய் போல் நம்மை காப்பவளே

(ஜெயஜெய)

சங்கு சக்கரம் வில்லும் அம்பும் மின்னும் வாளும் வேலுடன் சூலமும்
தங்க கைகளில் தாங்கி நிற்பாள் அவள் தங்க கைகளில் தாங்கி நிற்பாள் (ஜெயஜெய)
சிங்கத்தின் மேல் அவள் வீற்றிருப்பாள் திங்களை முடிமேல் சூடி நிற்பாள்
கருணை கண்கொண்டு பார்த்திருப்பாள் மங்கள வாழ்வு தந்திடுவாள் (ஜெயஜெய)
திருமகள் கலைமகள் அவளே திருவருள் புரியும் மலை மகளும் அவளே
அங்கயற் கண்ணியும் அவளே மங்கையற்கரசியும் அவளே
(ஜெயஜெய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முண்டக் கண்ணியும் அவளே அபிராமி அம்மையும் அவளே
ஜெயஜெயதேவி துர்க்கா தேவி சரணம்
கனக துர்க்காதேவி சரணம்
கனக துர்க்காதேவி சரணம்

தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

(தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே என்ற நாமம் வரும் போதும் விரதம் இருப்பவர்கள் நமஸ்காரம் செய்வது நல்லது. )





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் சக்தி

நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும்
நிறைந்த சுடர்மணிப் பூண்,
பஞ்சுக்கு நேர்பல துன்பங்க ளாம் இவள்
பார்வைக்கு நேர் பெருந்தீ
வஞ்சனை யின்றிப் பகையின்றிச் சூதின்றி
வையக மாந்தரெல் லாம்,
தஞ்சமென் றேயுரைப் பீர்அவள் பேர்சக்தி,
ஓம்சக்தி, ஓம்சக்தி, ஓம்.

"நல்லதுந் தீயதுஞ் செய்திடும் சக்தி
நல்லதை நமக்கிழைப் பாள்,
அல்லது நீங்கும்" என் றேயுல கேழும்
அறைந்திடு வாய் முரசே
சொல்லத் தகுந்த பொருளன்று காண்இங்கு
சொல்லு மவர் தமையே,
அல்லல் கெடுத்த ரர்க்கிணை யாக்கிடும்
ஓம்சக்தி, ஓம்சக்தி, ஓம்.

நம்புவ தேவழி யென்ற மறைதன்னை
நாமின்று நம்பி விட்டோம்
கும்பிட்டெந் நேரமும் "சக்தி" யென்றாலுனைக்
கும்பிடு வேன், மனமே
அம்புக்கும் தீக்கும் விடத்துக்கும் நோவுக்கும்
அச்சமில் லாத படி
உம்பர்க்கும் இம்பர்க்கும் வாழ்வு தரும்பதம்
ஓம்சக்தி, ஓம்சக்தி, ஓம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னைப் பொழிந்திடு மின்னை வளர்ந்திடு
போற்றி உனக்கிசைத் தோம்
அன்னை பராசக்தி என்றுரைத் தோம் தளை
அத்தனை யுங்களைந் தோம்
சொன்ன படிக்கு நடந்திடு வாய், மன
மேதொழில் வேறில்லை, காண்
இன்னு மிதேயுரைப் போம், சக்தி, ஓம்சக்தி,
ஓம்சக்தி, ஓம்சக்தி, ஓம்.

வெள்ளை மலர்மிசை வேதக் கருப்பொரு
ளாகி விளங்கிடு வாய்
தெள்ளு கலைத்தமிழ் வாணி நினக்கொரு
விண்ணப்பஞ் செய்திடு வேன்
எள்ளத் தனைப்பொழு தும்பய னின்றி
இராதென்றன் நாவினி லே
வெள்ள மெனப்பொழி வாய்சக்தி வேல், சக்தி
வேல் சக்தி வேல் சக்தி வேல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசஷ்டி கவசம்

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

துதிப்போர்க்கு வல்வினை போம், துன்பம் போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கலித்(து) ஓங்கும்
நிஷ்டையும் கைகூடும், நிமலர் அருள் கந்தர்
சஷ்டிக் கவசந் தனை

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி ஆட
மைய நடனஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசஅங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன் தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தன்னைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைகளி ரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு துமெனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வாலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தர்களெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்ட துவோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடுத்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீ எனக் கருள்வாய்
ஈரேழ் உலகமு மெனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணாளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
எந்நா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவள் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் மாலையில் கருத்துடனாளும்
ஆசா ரத்துடன் அங்கத் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்து நீறணிய
அட்டதிக் குள்ளோ ரடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலக்ஷ்மி மிகளில்
வீரலக்ஷ்மி மிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணிந்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனம்கிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில் நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பன் பாடல்

ஐயப்பனே ஐயப்பனே ஓடிவா - எங்கள்
ஆதி சிவன் புத்திரனே ஆடிவா
மெய்யப்பனே மெய்யப்பனே ஓடிவா - தும்பிக்
கையப்பனின் தம்பியே நீ ஆடிவா.

(ஐயப்பனே)

பம்பா நதி குளிச்சு வந்தோம் ஓடிவா - எங்கள்
பாதையெல்லாம் காவலுக்கு கூடவா
அழுதாமல் ஏறிவந்தோம் ஓடிவா - எங்கள்
ஐயமெல்லாம் தீர்த்து வைக்க ஆடிவா.

(ஐயப்பனே)

நெய்யுருக்கி எடுத்து வந்தோம் ஓடிவா - உனக்கு
மெய்யு ருகி படைக்கனுமே ஆடிவா
சந்தனத்தைக் குழைத்து வந்தோம் ஓடிவா - அத
சாத்தனுமே மேனியெல்லாம் ஆடிவா.

(ஐயப்பனே)

மணிகண்ட நாயகனே ஓடிவா - உனக்கு
மணிதீபம் ஏற்றி வச்சோம் காணவா
ஜோதி வடிவானவனே ஓடிவா - மண்ணில்
ஜாதிமத பேதமெல்லாம் தீர்க்கவா.

(ஐயப்பனே)

மெட்டெடுத்தோம் மெட்டெடுத்தோம் கேட்கவா - எங்க
மெட்டுக்கு ஒரு பாட்டுக் கட்ட ஓடிவா
பஜனை வச்சோம் பஜனை வச்சோம் கேட்கவா - எங்க
பஜனையில் பாட்டுப்பாட ஓடிவா.

(ஐயப்பனே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஞ்சநேயர் பாடல்

ஆஞ்சநேயா ஓடி ஓடி வா வா உன்னை
ஆராதித்தோம் அசைந்து ஆடி வா வா
வெற்றிலை மாலை அணிந்து நீயும் வாவா மக்கள்
வெற்றியுடன் பணிந்து நின்றோம் வாவா

(ஆஞ்ச)

அன்பர் உள்ளம் அறிந்தவனே வாவா எங்கள்
அற்புதனே தற்பரனே வாவா ராமனை
நெஞ்சத்தில் கொண்டவனே வாவா உன்னை
ஆடிப் பாடிப் பரவுகின்றோம் வாவா.

(ஆஞ்ச)

அற்புதனே ஆனந்தனே வாவா - எங்கள்
கலியுக மாருதியே வாவா - இந்த
மணிகொண்ட வாலை ஆட்டி வாவா
மக்கள் துயர்தீர்த்திடவே வாவா.

(ஆஞ்ச)


ராம பஜனை செய்ய நீயும் வாவா
ராம ராம ராம ராம ராம் ராம் - ஸ்ரீ
ராம ராம ராம ராம ராம் ராம்
ராம ராம ராம ராம ராம் ராம் - ஸ்ரீ
ராம ராம ராம ராம ராம் ராம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளங் கனிந்த நன்றிகள்

கடந்த **26.05.2011** அன்று எம்மை
எல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு
இவ்வுலக வாழ்வினை நீத்து இறைபதம் எய்திய
எங்கள் குடும்பத் தலைவன் திரு.
செ. கனகேந்திரம் அவர்களின் செய்தி கேட்டு உடன்
விரைந்து வந்து அவரது இறுதிச் சடங்குவரை உரிய
உதவிகள் ஆற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள்,
அயலவர்கள் அவரது இறுதிச் சடங்குகளில்
கலந்து கொண்டோர், உள்நாட்டிலிருந்தும்,
வெளிநாடுகளிலிருந்தும், தொலைபேசி மூலம்
அனுதாபங்களைத் தெரிவித்தவர்கள்,
சகல விடயங்களிலும் உறுதுணையாக நின்று
பெருத்த உதவிகளைப் புரிந்த சொய்சாபுர
வாழ் நல்ல உள்ளங்கள் அனைவருக்கும்,
அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய
நிகழ்வுகளில் கலந்து கொண்டவர்களுக்கும்,
இன்னும் யாருக்காவது தவறுதலாக நன்றி கூற
தவற விடப்பட்டிருந்தால் அதையும் பெருந்தன்மையுடன்
ஏற்று உதவிய அனைத்து உள்ளங்களுக்கும்
இந்தப் புத்தகத்தை உரிய காலத்தில் அச்சிட்டு
தந்த அச்சகத்தாருக்கும் எமது
இதயங் கனிந்த நன்றியினைச் சிரம் தாழ்த்தித்
தெரிவித்துக் கொள்கிறோம்.



நன்றி

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் மனிதனாக வாழ வேண்டிய 18 விஷயங்கள்

| | |
|---|---|
| மிகவும் மதிக்கப்பட வேண்டியது | தாய் தந்தை |
| மிக மிக நல்ல நாள் | இன்று |
| மிக பெரிய வெகுமதி | மன்னிப்பு |
| மிகவும் வேண்டியது | பணிவு |
| மிகவும் வேண்டாதது | வெறுப்பு |
| மிகப் பெரிய தேவை | நம்பிக்கை |
| மிகக்கொடிய நோய் | பேராசை |
| மிகவும் சுலபமானது | குற்றம் காணல் |
| கீழ்த்தரமானது | பொறாமை |
| நம்பக்கூடாதது | வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | அதிக பேச்சு |
| செய்யக் கூடாதது | நம்பிக்கைத் துரோகம் |
| செய்யக்கூடியது | உதவி |
| விலக்க வேண்டியது | சோம்பேறித்தனம் |
| உயர்வுக்கு வழி | உழைப்பு |
| நழுவ விடக்கூடாதது | வாய்ப்பு |
| பிரியக் கூடாதது | நட்பு |
| மறக்கக் கூடாதது | நன்றி |

தமிழ்மாலை பதிப்பகம்:- வெள்ளவத்தை தொலைபேசி இல: 011 485 11 99
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org